தினகரன்

# கிருமி நாசினி தெளிப்பு




கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக புதுச்சேரி விவிபி நகரில் உழவர்கரை நகராட்சி சார்பில் கிருமி நாசினி தெளிக்கப்பட்டது.

# முகக்கவசம் தயாரிக்கும் சுய உதவிக்குழு



▶ புதுவையில் மகளிர் சுய உதவி குழுவினர் முகக்கவசம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

---

**புதுச்சேரி, மார்ச் 27:** நாடு முழுக்க கொரோனா பீதி ஏற்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் தங்களை தற்காத்துக்கொள்ள பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். பலர் வீடுகளுக்குள் முடங்கி கிடந்தால் சில அத்தியாவசிய பணிகளுக்கு வெளியில் வர வேண்டியுள்ளது. அவ்வாறு வரும்போது அவர்களுக்கு முகக்கவசம் இன்றியமையாததாக உள்ளது. மேலும் சுகாதாரத்துறை ஊழியர்கள், போலீசார் உள்ளிட்டோருக்கும் முகக்கவசம் அவசியமாக தேவைப்படுகிறது. ஆனால் தற்போது முகக்கவசம் கிடைப்பது அரிதாகிவிட்டது. இதனால் மகளிர் குழுவினர் முகக்கவசம் தயாரிக்க வேண்டும் என அரசு அறிவுறுத்தியுள்ளது. அதன்படி புதுச்சேரி கருவடிக்குப்பம் வசந்தம் கலைவாணி மகளிர் சுயஉதவி குழுவினர் முகக்கவசம் தயாரிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தயாரிக்கும் முகக்கவசங்கள் நகராட்சி ஊழியர்கள் அதிகளவில் வாங்கி அணிந்து வருவதாகவும், மேலும் பல அரசுத்துறை ஊழியர்கள் இவர்களிடம் முகக்கவசம் வாங்கி வருவதாகவும் மகளிர் குழுவின் தலைவி சரஸ்வதி தெரிவித்துள்ளார்.